வேலூர் மாவட்டமுதன்மைக் கல்விஅலுவலரின்செயல்முறைகள்
ந.க.எண்.1019 /அ2/2022. நாள். 21.05.2022.

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி– வேலூர்மாவட்டம்– மெட்ரிகுலேஷன் பள்ளிகள்/ நர்சரி மற்றும் பிரைமரிப் பள்ளிகள்– குழந்தைகளுக்கான இலவசமற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் கீழ் 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 25% இடஒதுக்கீடு வழங்குதல்–வழிக்காட்டு நெறிமுறைகள் மற்றும்அறிவுரை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை | 1. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய்க் கல்விஉரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011.<br>2. அரசாணை (நிலை) எண். 66 பள்ளிக் கல்வி (PL2) துறைநாள் 07.04.2017<br>3. அரசாணை (எம்.எஸ்) எண்.60,பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள். 01.04.2013.<br>4. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்விஉரிமைச் சட்ட மாநிலமுதன்மைதொடர்புஅலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள்இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022நாள்.06.04.2022 மற்றும் 18.04.2022 |

••••••••••

பார்வை 4ல் காணும் செயல்முறை கடிதத்தின் தொடர்ச்சியாக, இணையதள வழியாக விண்ணப்பங்கள் பதிவேற்றம் மற்றும் மாணாக்கர் சேர்க்கை ஆகியவற்றின் போது கீழ்க்காணும் நடைமுறைகளை தவறாது பின்பற்றத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவேற்றம் செய்த விண்ணப்பங்களில் கீழ்க்காணும் சான்றிதழ்களை ஆய்வு செய்யும் அலுவலர்கள் ( முதல்வர்கள் ) தவறு ஏதுமின்றி கவனமுடன் செயல்படவேண்டும்.

**1 (1 ) பிறப்புச் சான்று**

பதிவேற்றம் செய்யப்பட்டகுழந்தையின் பிறப்பு சான்றிதழை ஆய்வு செய்து, பார்வை (2) –ல் உள்ளஅரசாணையின் படி கீழ்க்காணும் சான்றிதழ்களில் ஏதேனும் ஒரு சான்று பதிவேற்றம் செய்துள்ளார்களா என உறுதி செய்ய வேண்டும்.

a) Birth Certifcate
b) Hospital / Auxilliary and Midwife register
c) Anganwadi Record
d) Declaration through an affidavit of the age of the child by the parent / Guardian

**எல்.கே.ஜி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2018 முதல் 31.07.2019 க்குள் பிறந்திருக்கவேண்டும்.**

**1 (2) வாய்ப்புமறுக்கப்பட்டபிரிவினருக்கானசான்று**

வாய்ப்புமறுக்கப்பட்டபிரிவினர் கீழ்விண்ணப்பிருந்தால், அக்குழந்தை கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒருபிரிவினரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும், மேலும், கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளவாறு உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பதிவேற்றம் செய்துள்ளார்களா என உறுதி செய்ய வேண்டும்.

| Name of the Community | Competent Authority |
|---|---|
| (Backward Class )<br>பிற்படுத்தப்பட்டோர் | Deputy Tahsildar, Revenue Department, Government of Tamilnadu. |
| (Back ward Class Muslim)<br>பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம் | |
| Most Backward Class<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | |
| Denotified Community<br>சீர்மரபினர் | |
| Scheduled Community<br>பட்டியல் வகுப்பினர் | Tahsildar, Revenue Department, Government of Tamilnadu / Competent authority in the case of children coming from other States. |
| ( SCA)<br>ஆதிதிராவிடர்<br>( அருந்ததியினர்) | |
| (Scheduled Tribes)<br>பழங்குடியினர் | RDO / Sub Collector, Revenue Department, Government of Tamilnadu / Competent authority in the case of children coming from other States. |

**1 (3) வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்புப் பிரிவினருக்கான சான்று**

வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவினர் கீழ் விண்ணப்பித்திருந்தால், அக்குழந்தை கீழ்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு பிரிவினரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும், மேலும், கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சான்றினை பதிவேற்றம் செய்திருக்க வேண்டும்,

| Name of the Special Category | Competent Authority |
|---|---|
| ஆதரவற்றோர் (Orphan) | District Social Welfare Officer, Department of Social Welfare and Nutritious Meal Programme |
| எச்ஐவி யால் பாதிக்கப்பட்ட குழந்தை<br>(HIV Affected Child) | Medical Officer authorized by the Department of Health and Family Welfare, Government of Tamilnadu. |
| மூன்றாம் பாலினத்தவர் (Transgender) | |
| துப்புரவு தொழிலாளியின் குழந்தை (Children of Scavengers ) | Competent Authority authorized by the Commissioners of the respective Corporations, Municipalities, Executive Officers of the respective Town Panchayats and Presidents of the respective Village Panchayats. |

| | |
|---|---|
| துப்புரவு தொழிலாளியின் குழந்தை (மாநராட்சி, நகராட்சி, நகர்புற ஊராட்சி, கிராம ஊராட்சியில் பணிபுரியாதவர்கள்) (Children of Scavengers who are not employed in Corporations, Municipalities, Town Panchayats and Village Panchayats) | District Collector or the authority authorized by the District Collector in this behalf. |
| மாற்றுத்திறனாளியாக இருக்கும் குழந்தை (Differently abled Child) | District Differently abled Rehabilitation Officer. |

**1 (4) நலிவடைந்த பிரிவினருக்கானச் சான்று (வருமானச் சான்று)**

**ஆண்டு வருமானம் இரண்டு இலட்சத்துக்கும் (2,00,000 /–) கீழ் பெறும் அனைத்துப் பிரிவினரும் நலிவடைந்த பிரிவினரின் கீழ் விண்ணப்பிக்கலாம். இதன் பொருட்டு பெற்றோரின் ஆண்டு வருமானச் சான்று, சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெற்று பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.**

| | |
|---|---|
| **Income Certificate** | **Tahsildar, Revenue Department, Government of Tamilnadu.** |

**1 (5) இருப்பிடச் சான்று**

பார்வை (2)–ல் உள்ள அரசாணையின்படி, இருப்பிடத்தை நிரூபிக்கும் கீழ்காணும் சான்றிதழ்களில் ஏதேனும் ஒரு சான்று பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

a) Family Card.
b) Voter ID Card.
c) Aadhar ID Card.
d) Driving License.
e) Bank Pass Book.
f) Telephone Bill.
g) PAN Card.
h) Certificate of Residence Issued by VAO.
i) ID Card issued by State Government / Central Government / Public Sector Undertakings.

**மேலும், விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குழந்தையின் பெற்றோர் வசிப்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.**

விண்ணப்பங்களை தரம் வாரியாக (தகுதியானது / தகுதியற்றது) பிரிக்கும் பணி முடிவடைந்த பின்னர் **2022–2023** ஆம் கல்வியாண்டில் 25% ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை சார்பாக கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

- ✓ **விண்ணப்பதாரரின் இருப்பிடத்திலிருந்து பள்ளி அமைவிடம் 1 கிலோ மீட்டருக்குள் உள்ள விண்ணப்பங்களை மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் 1 கி.மீ சுற்றளவில் வீடுகள் இல்லை எனில் மட்டுமே அடுத்த 1 கி.மீ பரிசீலனைக்கு எடுத்து கொள்ளலாம்.**

- ✓ நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சார்பாக **28.05.2022** மாலை **5** மணிக்கு மேல் பெற்றோரிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்பட்டு ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் சேர்க்கைக்கு தகுதி பெறின் குலுக்கல் நடைபெறும் நாளுக்கு முன்னர் அதன் மீது விசாரணை செய்து தேவையான ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டால், குலுக்கலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ✓ தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை அப்பள்ளியின் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விட கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் **30.05.2022** அன்று சேர்க்கைக்கான மாணாக்கர்களை தெரிவு செய்ய வேண்டும். குறைவாக இருந்தால் தகுதியான அனைத்து விண்ணப்பங்களுக்கும் சேர்க்கை வழங்க வேண்டும்.

- ✓ பள்ளி பொதுத் தேர்வு மையாக செயல்படாவிட்டால் **30.05.2022** அன்று காலையிலேயே குலுக்கல் நடைபெற வேண்டும்.

- ✓ பள்ளி பொதுத் தேர்வு மையாக செயல்படுமாயின் தேர்வு முடிந்த பிறகு **30.05.2022** பிற்பகல் குலுக்கல் நடைபெற வேண்டும். மேலும் அவ்வாறான பள்ளிகள் தனியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

- ✓ வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறப்பு பிரிவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஆதரவற்றோர் / HIV ஆல் பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புரவு தொழிலாளியின் குழந்தை / மாற்று திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே ( குலுக்கலின்றி ) சேர்க்கை வழங்கிட வேண்டும்.

- ✓ பார்வை 3 ல் உள்ள அரசாணையின் படி , சேர்க்கைக்கான குலுக்கல் முடிந்த பிறகு ஒரு பிரிவுக்கு ஐந்து மாணாக்கர்கள் ( 5 Seat Per Section ) என்ற வீதத்தில் ( வரிசை எண்ணிட்டு ) காத்திருப்பு பட்டியலுக்கான மாணவர்களை குலுக்கலில் தேர்ந்தெடுக்க வேண்டும். குலுக்கல் முறையில் தெரிவு செய்த மாணவர்களின் விவரங்களை பள்ளித் தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் **31.05.2022** அன்று வெளியிட வேண்டும். அப்பட்டியலில் குலுக்கலின் போது இருந்த வருகைப்புரிந்த ஆய்வு அலுவலர், தலைமைஆசிரியர் / முதல்வர்கள் குறைந்த பட்சம் இரண்டு பெற்றோர்கள் கையொப்பம் இட வேண்டும்.

- ✓ சேர்க்கை முடிவுற்றபின் அவ்விவரத்தினை நிர்ணயிக்கப்பட்ட படிவம் 5 இல் அல்லது கடந்த ஆண்டை போலவே Selection List / Waiting List / Final Admission List படிவத்தில் பூர்த்தி செய்து **04.06.2022** பிற்பகல் 5 மணிக்குள் சமர்பிக்க வேண்டும்.

- ✓ குலுக்கலின் போது ஏதேனும் அசாதாரண சூழ்ல் ஏற்படின் சார்ந்த பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களைக் கொண்டு உடனுக்குடன் சரி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் முதன்மைக் கல்வி அலுவலரையோ அல்லது மாவட்டக் கல்வி அலுவலரையோ தொடர்பு கொண்டு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். தன்னிச்சையாக சார்ந்த பள்ளி முதல்வரோ அல்லது ஆய்வு அலுவலரோ முடிவெடுக்க கூடாது.

**குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் சேர்க்கைக்கு வரத் தவறினால் அந்தந்த குழந்தையின் பெற்றோருக்கு தொலைப்பேசி மற்றும் குறுஞ்செய்தி (SMS) வாயிலாகத் தவறாமல் தகவல் தெரிவித்து விட்டு காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப் படி சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.**

மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி எவ்விதப் புகாருக்கும் இடமளிக்கா வண்ணம், தங்கள் பள்ளிக்கு தேவையான வசதிகளும் செய்து, இப்பணியினைச் செவ்வனே மேற்கொள்ளுமாறு அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலை மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி வேலூர் மாவட்டம் சார்பாக எவ்விதப் புகாருக்கும் இடமளிக்கா வண்ணம், கீழ்கண்ட அட்டவணையின் படி, இப்பணியினை மேற்கொள்ளுமாறும் முழுப் பொறுப்புடன் அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

| **வ. எண்.** | **நிகழ்வு** | **தேதி** |
|---|---|---|
| 1. | சேர்க்கைக்கு இணையதள வழியாக விண்ணப்பம் செய்ய வேண்டிய நாள் | **19.05.2022 முதல் 25.05.2022** |
| 2. | தகுதியான விண்ணபதாரர் விவரம் / தகுதியில்லாத விண்ணபதாரர் விவரம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் பள்ளித் தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டிய நாள் | **28.05.2022 பிற்பகல் 5 மணி** |
| 3. | தகுதியான விண்ணபங்கள் 25% ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விடக் கூடுதலாக இருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டிய நாள் | **30.05.2022** |
| 4. | குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணபதாரர்களின் விவரங்கள், விண்ணப்ப எண் மற்றும் பள்ளியில் தகுதியுள்ள, ஒரு பிரிவுக்கு ஐந்து மாணாக்கர்கள் ( 5 Seats Per Section) என்ற வீதத்தில் (வரிசை எண்ணிட்டு) காத்திருப்பு பட்டியலுக்கான மாணாக்கர்களின் விவரங்கள் ஆகியவற்றை பள்ளித் தகவல் பலகை மற்றும் இணையதளத்தில் வெளியிட வேண்டிய நாள் | **31.05.2022** |
| 5. | சேர்க்கை முடிவுற்றபின் அவ்விவரத்தினை நிர்ணயிக்கப்பட்ட படிவம் –5 இல் ( கடந்த ஆண்டை போலவே உள்ள படிவத்தில் ) SELECTION LIST/ WAITING LIST/ FINALLY SELECTION LIST ஆகியவை எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் கட்டாயம் வேலூர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பள்ளி அளிக்க வேண்டிய நாள் | **04.06.2022 அன்று அல்லது அதற்கு முன்னர்** |

**குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் சேர்க்கைக்கு வரத் தவறினால் அந்தந்த குழந்தையின் பெற்றோருக்கு தொலைப்பேசி மற்றும் குறுஞ்செய்தி (SMS) வாயிலாகத் தவறாமல் தகவல் தெரிவித்து விட்டு காத்திருப்புப் பட்டியலில் முன்னுரிமைப் படி சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.**

மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றி எவ்விதப் புகாருக்கும் இடமளிக்கா வண்ணம், தங்கள் பள்ளிக்கு தேவையான வசதிகளும் செய்து, இப்பணியினைச் செவ்வனே மேற்கொள்ளுமாறு அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலை மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**

முதல்வர்கள்
அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள்
மற்றும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

**நகல்**

1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கையின் பொருட்டு தங்கள் ஆளுகைகுட்பட்ட நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.